**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 108/2018**
**U/s. 457,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | | |
|---|---|---|
| **Name** | : இளமுருகன் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 108/2018 16.03.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 2.50 AN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் அருளானந்த நகர் புஷ்பம் காலனி முதல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பேராசிரியராக பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 25.05.2017 ம் தேதி மாலை 5.30 மணியளவில் வடுவூர் தென்பாடிற்கு சென்றபோது எனது வீட்டை பூட்டி விட்டு சென்றேன். மீண்டும் நான் இரவு 8–8.30 மணியளவில் வந்தபோது எனது வீட்டின் கதவு உடைக்கபட்டிருந்தது. எனது வீட்டின் கீழ் , மேல் தள கதவு உடைக்கப்பட்டிருந்தது. எனது வீட்டின் முதல் தளத்தில் படுக்கை அறையில் வைக்கப்பட்டிருந்த பீரோ உடைக்கப்பட்டிருந்தது. புடவைகள் சிதறி கிடந்தன. நகைகள் , வளையல் –5 , செயின் –3 , மோதிரங்கள் –5 , கைசெயின்– 1, வெள்ளி பாத்திரங்கள் மற்றும் ரூ. 4,60,000/– பணம் , மொத்தம் 30 பவுன் , ரூ. 15,000/– மதிப்புள்ள வெள்ளி பாத்திரங்கள் ஆகியவற்றை காணவில்லை. நான் தெற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனது புகாரின் மீது போலீசார் நடவடிக்கை எடுத்து கைரேகை நிபுணர் வீட்டிற்கு வரவழைத்து விசாரணை செய்தார்கள். வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் சரவணன், அலெக்ஸ்பாண்டியன், முருகானந்தம், ஜீவானந்தம், சுந்தரபாண்டியன் என தெரிந்து கொண்டேன். காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு வர சொன்னதன் பேரில் நான் அங்கு சென்று வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர்களின் விவரம் பற்றி தெரிந்து கொண்டேன். காணாமல் போன எனது பொருள்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படம் – எண்ணிக்கை 12 , **அந்த புகைப்படம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. குறுந்தகடு (சபொ–1 ). நகைமதிப்பீட்டிற்கான சான்றிதழ் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது வீடு மூன்று தளம் என்றால் சரிதான். என் வீட்டில் நானும் எனது மனைவியும் மட்டும் தான் உள்ளோம். சம்பவ தினத்தன்று நானும், எனது மனைவியும் வடுவூர் தென்பாடிற்கு ஒன்றாக தான் சென்றோம் என்றால் சரிதான். எனது வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து தெற்கு காவல்நிலையத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே போலீசாருக்கு போன் செய்தேன், காவலர்கள் வீட்டிற்கே வந்து விட்டார்கள். காவலர்கள் தெற்கு காவல்நிலையத்திலிருந்து 8.45 மணிக்கு எனது வீட்டிற்கு வந்தார்கள். வீட்டிற்கு வந்த காவலர்களிடம் காணாமல் போன பொருள்களின் விவரம் எழுதி புகார் கொடுத்தேன். எனது மனைவியிடம் சாட்சி கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். போலீசார் சொன்னதன் பேரில்தான் மேற்கூறிய எதிரிகளின் பெயர்கள் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் 26.05.2017 என எழுதி பிறகு 25.05.2017 என திருத்தப்பட்டுளளது என்றால் சரிதான். 9.00 மணியளவில் நான் எனது வீட்டிலேயே புகார் எழுதி கொடுத்தேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 108/2018**
**U/s. 457,380 IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : முருகன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

**4** வது எதிரி ஆஜர்**. 1** வது எதிரி **VC** ல் ஆஜர் செய்யபட்டார்**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 108/2018 16.03.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 3.15 PM**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் அருளானந்த அம்மாள் நகர் 3 வது குறுக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் இயற்பியல் துறை தலைவராக இருந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். அசா1 இளமுருகனை தெரியும். கடந்த 25.05.2017 ம் தேதி இரவு 9.00 மணியளவில் அசா1ன் வீடு உடைக்கப்பட்டிருந்தது என தெரியவந்தது. நான் அங்கு சென்று பார்த்தபோது போலீசார் மற்ற நபர்களை அங்கு நின்று விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் அசா1 தனது வீட்டிலிருந்தது சுமார் 30 பவுன் நகை காணாமல் போய்விட்டதாக என்னிடம் சொன்னார். அசா1 சம்பவகுறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இளமுருகன் அசா1 ன் வீட்டிலிருந்து எனது வீடு நேர் எதிர் வீட்டிற்கு அடுத்த வீடு என்றால் சரிதான். நான் வசிக்கும் பகுதியில் யாரேனும் சிறிதாக சத்தம் போட்டால் கூட கேட்கும் என்றால் சரியல்ல. சம்பவ நடந்த நாளில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு முன்பாக நான் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்த பின்பு தான் வந்து பார்த்தேன். அசா1 யை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு அவரை 2009 ம் வருடத்திலிருந்து தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் வீட்டில் இல்லை என்றாலும், அசா1 எனக்கு தெரிந்த நபர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.